THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No.51/2015**

Deposition of RW.2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 19.**11.2022.**

Evidence Recorded Time: 12.15 P.M. to 12.25 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கிருஷ்ணமூர்த்தி** | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | ஆண்டி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை**:–

நான் இதில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி.2 ஆவேன். எனது சத்திய பிரமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்,

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.3– | – | TN 36 K 0938 வாகனத்தின் பாலிசி நகல் | – சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4– | 20.10.2022 | வழக்கறிஞர் அறிவிப்பு | – அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.5– | 01.11.2022 | அஞ்சல் ஒப்புதல் அட்டை | – அசல் |

எனவே மனு தள்ளுபடியாக வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் இணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். TN 36 K 0938 என்ற மகேந்திரா வாகனம் எங்கள் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் விபத்து சமயத்தில் மனுதாரர் ஓட்டுநர் உரிமத்தை தொலைத்துவிட்டார் என்றும் சொல்வது தவறு என்றால் சரியல்ல. பாலிசி நடைமுறையில் இருந்ததால் மனுதாரருக்கு நஷ்ட ஈட தரக்கடமைப்பட்டவர்

என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் குடிபோதையில் வாகனத்தை ஓட்டிச் செல்லவில்லை என்றாலும் ஆங்கில மருந்து சாப்பிட்டால் ஆல்ஹகால் இருக்கும் என்றாலும் சரியல்ல. வாகனத்தின் எண் சரியாக உள்ளது என்றாலும் விபத்து பதிவேட்டில் மேற்படி வாகனம் ஆட்டோ என்று உள்ளது என்றாலும் அந்த வாகனம் மகேந்திரா குட்டியானையை ஆட்டோ என்று சொன்னாலும் சரியல்ல. நாங்கள் தான் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–RW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்